(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 66.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 மே 04, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

106/ '15

1\. கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் தென்கொரியா மற்றும் மலேசியாவில் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் தென்கொரியா மற்றும் மலேசியாவில் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

236/ '15

2\. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மூலம், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் புகைப்படத்துடன் கூடிய 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டு ரூபா 29,400,000 பணத் தொகை முறைகேடாக பயன்படுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆண்டுக்காக 18 இலட்சம் சமுர்த்தி பெறும் குடும்பத்தினரிடையே விநியோகிப்பதற்கு 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) குறித்த செலவை அங்கீகரித்த அதிகாரி யாரென்பதையும்;

(iii) இவருக்கு மேற்படி பணத் தொகையை அங்கீகரிக்கும் அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி 50 இலட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(v) அதன் பொருட்டு கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாழ்வின் எழுச்சி நிதியத்தின் நிதியை தமது கட்சியின் தேர்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதி முறைகேடாகப் பயன்படுத்தல் தொடர்பாக நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் புலனாய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஏற்புடைய திணைக்களம் அல்லது அமைச்சு மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன்போது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) இதற்கான செலவு வாழ்வின் எழுச்சி நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருப்பின், ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

364/ ' 15

3.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 யூலை மாதம் தம்புள்ளையில் நடைபெற்ற இந்திய – இலங்கை கிரிக்கட் போட்டியின் போது, யூலை 18 ஆம் திகதி இரவு இந்திய விளையாட்டு வீரர் ஒருவர் தங்கியிருந்த கண்டலம ஹோட்டல் அறைக்கு ஒரு பெண் சென்றுள்ளார் என்பதையும் அவர் அங்கு விடியும் வரை தங்கியிருந்தார் என்பதையும்;

(ii) இது தொடர்பாக அப்போதைய கிரிக்கட் விளையாட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர் அப்போதைய கிரிக்கட் செயலாளருக்கு பிரதியொன்றுடன் கூடியதாக இந்திய முகாமையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என்பதையும்;

(iii) இக்கடிதத்தின் உள்ளடக்கத்தின் படி இலஞ்சம் வழங்கும் முயற்சியொன்று இருந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக,

(i) போட்டித் தொடரை ஏற்பாடு செய்த நாட்டின் கிரிக்கட் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) சர்வதேச கிரிக்கட் கவுன்சில் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எழுத்து மூல அறிக்கைகள் இலங்கை கிரிக்கட் நிறுவனத்திடம் உள்ளதா;

(ii) ஆமெனில் அவற்றை சமர்ப்பிப்பாரா;

(iii) இன்றேல் இவ்வறிக்கைகள் அழிக்கப்பட்டமை தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர்;

(iv) அறிக்கைகள் அழிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணையை ஆரம்பிப்பாரா;

(v) அவ்விசாரணையில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் பதவி வகிப்பவர் ஒருவர் குற்றவாளியாகக் காணப்படின் அவரை பதவியிலிருந்து நீக்குவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

378/ '15

4.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய தேசிய வீடமைப்பு திணைக்களத்தினால், 1984.01.01 ஆம் திகதி, கண்டி மாவட்டத்தில் அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், ரம்புக்கேஎல, பன்சல்தன்னவத்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற ஆட்களுக்கு குடியிருப்பதற்காக காணித் துண்டுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அளிப்புப் பத்திரங்களை வழங்கும் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காணித் துண்டுகளில் குடியமர்ந்துள்ளவர்களுக்கு நிரந்தர உறுதிகளை வழங்குதல் இதுவரை நடைபெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி குடியிருப்பாளர்களின் காணிகளுக்கு துரிதமாக உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

417/ '16

5.

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதி தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரை அரச ஊழியர்களுக்கு, கலைஞர்களுக்கு மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராக பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (FCID) கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள அரச ஊழியர்களின், கலைஞர்களின் மற்றும் வர்த்தகர்களின் பெயர்களை வெவ்வேறாக சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின், கலைஞர்களின் மற்றும் வர்த்தகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இவ்விசாரணைகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/ ' 16

6.

கௌரவ விஜித ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட ரூபா 10,000/- பணத் தொகையில் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 5/2015 இன் பிரகாரம் அரசாங்க, கூட்டுத்தாபனங்கள், சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா 8000/- தொகையானது அரச கருத்திட்டங்களின் பணியாட்டொகுதியினருக்கு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) முன்னைய சம்பள அதிகரிப்புக்களின்போது கருத்திட்டங்களின் ஊழியர்களுக்கும் அச்சம்பள அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (i) இன் பிரகாரம் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு 10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், கருத்திட்ட பணியாட்டொகுதியினருக்கு அது வழங்கப்படாமை தொடர்பில் ஏதுவாயமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சம்பள அதிகரிப்பை கருத்திட்ட ஊழியர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) உரிய சம்பள அதிகரிப்பை அரச கருத்திட்டப் பணியாட்டொகுதியினருக்கு துரிதமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) தற்போது 02 வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

428/ ’16

7.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்ற போது புதிய நாணயத்தாள்கள் நிதிச் சுற்றோட்டத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் பணவீக்கம் அதிகரிக்கும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

436/ ’16

8.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இலங்கை மின்சார சபையில் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த 55 வயதை தாண்டியுள்ள ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை மாத்திரமே ஓய்வூதியம் கிடைக்குமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏதேனும் காரணத்தினால் ஓய்வுபெற்றவர் மிகக் குறுகியதொரு காலப் பகுதியில் உயிரிழப்பாரெனில், எவ்வித ஆதரவுமின்றி நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படும் இவருடைய வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளைகளுக்கும் மேற்படி ஓய்வூதிய அனுகூலங்களை வழங்க முடியாதா என்பதையும்;

(ii) இதற்காக மேற்படி ஓய்வூதிய முறையில் மாற்றம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி),— ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை (ஆஉமுவ) தாபிக்கின்ற உடன்படிக்கைக்கு இலங்கை ஒரு கையொப்பமிடுநராக அவ்வுடன்படிக்கை இலங்கையினால் ஏற்புறுதி செய்யப்படுவதனை அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதனை அதிகாரமளித்து அவ்வங்கியின் உறுப்பினரொருவராக வருவதற்கு இலங்கையை இயலச்செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ எட்வட் குணசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"வைட் றோஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அக்குறணை பைதுஸ் ஸகாத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

நிதி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 240 - நிகழ்ச்சித் திட்டம் 2,— †இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திற்குப் புறம்பாக அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து 2016 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் பயன்பாட்டிற்காக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை (ரூபா. 55,000,000) விஞ்சாத தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தயார்படுத்திக்கொள்ளல் வேண்டுமாக.

சேவைகள் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 2015 நிதியாண்டின் நானாவித நிதியிலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 11 ஆம் இலக்க முற்பணக் கணக்குகளைத் தீர்த்தல்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 240 | - | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 02 | - | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 03 | - | கணக்கீட்டு உதவி |
| | | | மொத்தச் செலவினம் = ரூபா 55,000,000 |
| | | | (ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா மட்டும்) |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2016 மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 3.

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் ( 3 ) ஆம் உப பிரிவின் கீழான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் ஈதைல் மதுசாரம் தொடர்பில் மது வரியினைத் திருத்தியமைத்தல் மற்றும் ஈதைல் மதுசார இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 மார்ச்சு 02 ஆந் திகதிய 1956/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 988)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— அளவீட்டு அலகுகள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் உணவு பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 யூலை 2 ஆம் திகதிய 1921/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1954/34 ஆம் இலக்க 2016 பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 41 ஆவது பிரின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளையின் 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

தகவலுக்கான உரிமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் கீழ் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினால் ஆக்கப்பட்டு 2015 யூலை 21 ஆம் திகதிய 1924/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி ஒழுங்குவிதிகள் (அனுமதிப் பத்திரம்) மற்றும் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணு சக்தி (செயன்முறை மேற்கொள்வதற்கான எண்ணம் பற்றிய அறிவித்தல்) ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.